24.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### உரம் விற்பனையை கண்காணிக்க புதிய செயலி: விற்பனையாளர்களுக்குப் பயிற்சி

விழுப்புரம் மாவட்டக்தில் உரம் இருப்பு மற்றும் விற்பனையை கண்காணிக்கவும் விவசாயிகளுக்கு உர மானியத்தை நேரடியாக வழங்கவும் புதிய செல்லிடப்பேசி செயலி தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக உர விற்பனையாளர்களுக்கான பயிற்சிக் கூட்டம் விழுப்புரம் வேளாண்மைத் துறை அலுவலகத்தில், புதன்கிழமை நடைபெற்றது.

தனியார் மற்றும் கூட்டுறவு உர விற்பனையாளர்களுக்கு நடைபெற்ற இப்பயிற்சிக் கூட்டத்தை ஆட்சியர் எம்.லட்சுமி தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியது:

தமிழகம் முழுவதும் உள்ள தனியார் மற்றும் கூட்டுறவு உர சில்லறை விற்பனையாளர்கள் மூலம் ரசாயன உரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

உரங்கள் விநியோகத்துக்கான மானியத் தொகை முழு விலையில் கழிக்கப்பட்டு, மீதமுள்ள தொகை மட்டும் வசூல் செய்யப்படுகிறது.

இவ்வாறு விவசாயிகளுக்காக வழங்கப்பட்ட மானியத் தொகை, உரத் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து பட்டியலாகப் பெறப்பட்டு, வேளாண்மைத் துறை மூலம் பரிசீலிக்கப்பட்டு, அந்நிறுவனங்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

இந்த நடைமுறையால் விவசாயிகளுக்கு மானியம் நேரிடையாக சென்றடைவதில் சில முறைகேடான இழப்பீடுகள் நிகழ்வது மட்டுமல்லாமல், அரசுக்கு கூடுதல் நிதி செலவினமும் ஏற்படுகிறது.

எனவே விவசாயிகளுக்கு நேரடி மானியத்தை எளிதாக வழங்கும் பொருட்டு, தற்போதுள்ள நிலையை மாற்றி, மத்திய அரசின் புதிய உர

மானிய கொள்கைப்படி முதல் கட்டமாக "மொபைல் பேஸ்டு பெர்டிலைசர் மானிட்டரிங் சிஸ்டம்' எனும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாவட்டத்தில் உள்ள தனியார், கூட்டுறவு உர சில்லரை விற்பனையாளர்கள், செல்லிடப்பேசி செயலி மூலம் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு நேரடியாக மானியம் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், உர விற்பனையாளர்களின் உர இருப்பு மற்றும் விற்பனையை வாரந்தோறும் பதிவு செய்து கண்காணித்தல், இரண்டாம் கட்டமாக விவசாயிகளுக்கு உர மானியத்தை நேரடியாக வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பயிற்சி, உர விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது என்றார். கூட்டத்தில், வேளாண் இணை இயக்குநர் ஆ.ரத்தினசபாபதி, துணை இயக்குநர்கள் ரவி, விஜயகுமார், ராமலிங்கம், கனகசபை, கென்னடி மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, தூய்மை இந்தியா திட்டத்தில், வேளாண் துறை வளாகத்தை தூய்மைப் படுத்தும் நிகழ்ச்சியும், அங்கு மரக்கன்றுகளும் நட்டனர்.

## தென்னை விவசாயிகள் அமைப்பு கூட்டம்

திண்டுக்கல் தென்னை விவசாயிகள், உற்பத்தியாளர்கள் அமைப்பு முதலாம் ஆண்டு விழா வத்தலக்குண்டுவில் உள்ள அமைப்பின் வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட தென்னை விவசாயிகள் உற்பத்தியாளர்கள் நிறுவனத் தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். இயக்குநர்கள் ஏ.ஆர்.சீனிவாசன், தேன்நிலா, லிங்கையா,பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் முருகேசன் பேசியதாவது:

ஜூலை 10ஆம் தேதி வத்தலகுண்டுவில் தென்னை கொள்முதல் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதில், விவசாயிகள் தங்கள் தோட்டத்து தேங்காய்களை விற்பனை செய்யலாம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஏராளமான தென்னை மரங்கள் காய்ந்தன. பல விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

தமிழகம் முழுவதும் இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க ரூ.20 கோடி நிதியை மத்திய தென்னை வளர்ச்சி வாரியம் ஒதுக்கியுள்ளது. இந்த நிதி உரிய விவசாயிகளைச் சென்றடைய அரசு ஆவன செய்ய வேண்டும் என்றார்.

இதில் ஜெயவீரபாண்டியன், ஜெகதீசன் உள்பட 100-க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கொப்பரை கொள்முதல்: தென்னை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தென்னை விவசாயிகள் கொப்பரை கொள்முதலை பயன்படுத்தி பயன்பெறுமாறு ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கோயம்புத்தூர், பொள்ளாச்சி மற்றும் சூலூர் ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மூலம் தெலுங்குபாளையம், பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு, நெகமம், திம்மங்குத்து, திப்பம்பட்டி மற்றும் செஞ்சேரி ஆகிய 8 இடங்களில் அமைந்துள்ள நேரடிக் கொப்பரை மையங்கள் மூலம் தென்னை விவசாயிகளிடம் இருந்து கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் மூலம் 6 மாத காலத்துக்கு கொப்பரை கொள்முதல் செய்யப்படும். எனவே, சம்பந்தப்பட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கங்கத்தில் பதிவு செய்துள்ள விவசாய உறுப்பினர்களிடம் இருந்து பதிவு மூப்பு அடிப்படையில் வேளாண் அலுவலர்கள் சான்று செய்த தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ. 59.50 வீதம் கொள்முதல் செய்யப்படும். இதில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட விவசாய உறுப்பினர்களின் வங்கிக் கணக்கில் மின்னணு நிதி பரிமாற்றம் மூலம் நேரடியாகவே அல்லது கோடிட்ட காசோலையாகவோ வழங்கப்படும். எனவே, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தென்னை விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

**நகர்ப்புற மக்களும் கோழி வளர்ப்பில் ஈடுபடலாம்: பயிற்சி அளிக்கிறது கால்நடை ஆராய்ச்சி மையம்**

நாட்டுக் கோழி வளர்ப்பில், நகர்ப்புறங்களைச் சேர்ந்த முதியோர், ஆதரவற்றவர்கள், பெண்கள், ஓய்வு பெற்ற அரசு, தனியார் நிறுவன ஊழியர்களும் ஈடுபட்டு வருவாய் ஈட்டுவதற்காக, கோவை சரவணம்பட்டியில் உள்ள கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி - ஆராய்ச்சி மையம் 2 நாள் இலவச பயிற்சி வகுப்பு நடத்துகிறது.

சரவணம்பட்டியில் காளப்பட்டி பிரிவு பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும் 28, 29-தேதிகளில் இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இரு நாள்களும் காலை 10.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையிலும் நடைபெறும் இந்தப் பயிற்சியில், நாட்டுக் கோழியை கொட்டகை முறையில் எப்படி வளர்ப்பது, குஞ்சுகளை பராமரிப்பது, தீவனத் தயாரிப்பு, நோய்த் தடுப்பு முறைகள், முட்டை - இறைச்சி விற்பனை வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

மேலும், கோழிக் குஞ்சுகளை எங்கு வாங்க வேண்டும், தடுப்பூசி உள்ளிட்ட மருந்துகள் எங்கு கிடைக்கும், இன்குபேட்டர் உள்ளிட்ட இதர உபகரணங்களை எங்கு வாங்குவது என்பது போன்ற தகவல்களும், நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்த விடியோ பயிற்சி வகுப்பும் நடைபெற உள்ளது.

இந்தப் பயிற்சியில் கிராமப்புற மக்கள் மட்டுமின்றி, நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்களும், குறைந்த அளவு இடவசதி கொண்டவர்களும் கலந்து கொள்ளலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்துக்கான வருவாயை ஈட்ட வாய்ப்பு ஏற்படும் என்று பயிற்சி மைய இணைப் பேராசிரியர், தலைவர் மருத்துவர் கே.சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த இலவசப் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், கிராமப்புற, நகர்ப்புற மக்கள் மேற்கண்ட மையத்துக்கு நேரில் வரலாம். இது குறித்த மேலும் விவரங்களுக்கு 0422 - 2669965 என்ற தொலைபேசி

எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாவட்ட விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம்

தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், கோவை மாவட்ட விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் காரமடையை அடுத்த தாயனூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, சங்கத்தின் மாநிலத் தலைவர் சிவசாமி தலைமை வகித்தார்.

மாவட்டத் தலைவர் சுண்டக்கரை ரங்கசாமி, வட்டாரத் தலைவர் வெள்ளிங்கிரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி தலைவர் வேணுகோபால் வரவேற்றார்.

கூட்டத்தில் சிவசாமி பேசியது:

விளை நிலங்களுக்குள் நுழையும் யானை, காட்டுப் பன்றி, மான் உள்ளிட்ட விலங்குகளை விரட்ட விவசாயிகள் போராடி வருகின்றனர்.

இந்நிலையில், பிகார் மாநிலத்தில் பயிர்களை நாசம் செய்யும் சிறிய விலங்குகளை விவசாயிகளே சுட்டுக் கொல்ல அனுமதி வழங்கியுள்ளது போல், தமிழகத்திலும் அனுமதி வழங்க வேண்டும்.

சிறு, குறு விவசாயிகளுக்கு அரசு கடன் தள்ளுபடி வழங்கியுள்ளதுபோல், 5 ஏக்கர் மேல் உள்ள விவசாயிகளின் கூட்டுறவு கடன் உள்பட அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதில், வட்டாரத் தலைவர்கள் வேலுசாமி (பெரியநாயக்கன்பாளையம்), திப்பையன் (காரமடை), சங்க நிர்வாகிகள் பாலகிருஷ்ணன், தேக்கம்பட்டி சங்கரப்பன், தாயனூர் கிருஷ்ணசாமி உள்பட அன்னூர், சிறுமுகை, காரமடை வட்டாரப் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## 246 மூட்டை சூரியகாந்தி விதைகள் ஏலம்

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 246 மூட்டை சூரியகாந்தி விதைகள் வியாழக்கிழமை ஏலத்தில் விடப்பட்டன.

ஏலத்துக்கு மொத்தம் 12 ஆயிரத்து 300 கிலோ சூரியகாந்தி விதைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. இது அதிகபட்சமாக கிலோ ரூ.34.96, குறைந்தபட்சமாக கிலோ ரூ.29.25 என விற்பனையானது. ரொக்கம் ரூ.3 லட்சத்து 93 ஆயிரம் பட்டுவாடா செய்யப்பட்டது.

தற்போது பருவம் முடிவடையும் தருவாயில் இருப்பதால் வரத்து படிப்படியாகக் குறைந்து வருகிறது. வரும் வாரங்களில் இதன் விலை சற்று அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக விற்பனைக்கூட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கொப்பரை உற்பத்தி மழையினால் பாதிப்பு

காங்கயம் பகுதியில் தற்போது பெய்து வரும் மழையினால் தேங்காய்க் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

காங்கயம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் 100-க்கும் மேற்பட்ட தேங்காய் எண்ணெய் ஆலைகளும், 1000-க்கும் மேற்பட்ட தேங்காய்ப் பருப்பு (கொப்பரை) உலர் களங்களும் உள்ளன. இதன், மூலம் தினமும் 2 கோடி ரூபாய்க்கும் மேலாக வர்த்தகம் நடைபெற்று வருகிறது.

இங்கு தினமும் சுமார் 80 லாரி தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு, இந்தியா முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான தேங்காய்ப் பருப்புகள் இங்குள்ள உலர் களங்களில் உடைத்துக் காயவைக்கப்பட்டு, எண்ணெய் ஆலைகளுக்கு விற்கப்படுகிறது.

கேரளம், ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட பிற மாநிலங்கள் மற்றும் பொள்ளாச்சி, பட்டுக்கோட்டை, தேனி, சேலம் பகுதியில் இருந்தும் தேங்காய் கொள்முதல் செய்யப்பட்டு, இங்குள்ள உலர் களங்களில் தேங்காயப் பருப்புத் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு,

காயவைக்கப்படுகின்றன. அதன்பின்னர் எண்ணெய் ஆலைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உணவுக்காகவும் தேங்காய்ப் பருப்பு வட மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இந்நிலையில், காங்கயம் பகுதியில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருவதால், தேங்காய்ப் பருப்புகளைக் காயவைக்க முடிவதில்லை. இதனால், ஏற்கெனவே இருப்பு வைக்கப்பட்டிருக்கும் கொப்பரை மூலமாக தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

எனினும், மழை நின்றதும் ஒரு சில நாள்களில் கொப்பரை உற்பத்தி சீராகும் என தேங்காய்ப் பருப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழு: மக்காச்சோள சாகுபடியை அதிகரிக்கத் திட்டம்

தமிழகத்தில் மக்காச்சோள சாகுபடியை அதிகரிக்கக் கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழு (பி.சி.சி) திட்டமிட்டுள்ளது.

பல்லடம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள 5,000-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் மூலம் தினமும் 10 லட்சம் கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு கிலோ கறிக்கோழி உற்பத்திக்கு ரூ.70 வரை செலவு ஆகிறது.

கோழி இறைச்சி விற்பனையை அடிப்படையாகக் கொண்டு கொள்முதல் விலையை பல்லடம் கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு தினமும் நிர்ணயிக்கிறது.

கறிக்கோழியின் முக்கியத் தீவனமாக மக்காச்சோளம் உள்ளது. தமிழகத்தில் உள்ள கோழிப்பண்ணைகளுக்கு ஆண்டுக்கு 20 லட்சம் டன் மக்காச்சோளம் தேவைப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் 8 லட்சம் டன் அளவுக்குத்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுவும் நடப்பாண்டில் 6 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பற்றாக்குறையைப் போக்க பிகார், ஆந்திரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து மக்காச்சோளம் கொள்முதல் செய்யப்பட்டு, ரயில் மூலம் தமிழகத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

அவ்வாறு கொண்டு வரும்போது அதில், 15 சதவீதம் வரை விரயம் ஆகிறது. மேலும் போக்குவரத்து செலவும் அதிகமாகிறது. இதனைத் தவிர்க்க, தமிழக விவசாயிகள் பணப் பயிரான மக்காச்சோளத்தை சாகுபடி செய்வதின் மூலம் ஆண்டு முழுவதும் வருமானம் கிடைக்கும் வகையில் தமிழகக் கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழுத் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் செயலாளர் சுவாதி கண்ணன் (எ) சின்னசாமி கூறியதாவது:

தமிழகத்தில் உள்ள கறிக்கோழிப் பண்ணைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தமிழகத்தில் மக்காச்சோளசாகுபடி இல்லை. அதனால் வட மாநிலங்களில் இருந்து மக்காச்சோளத்தை விலைக்கு வாங்கி ரயில் மூலம் கொண்டு வந்து கோழிகளுக்குத் தீவனமாகக் கொடுத்து வருகிறோம்.

இங்குள்ள விவசாயிகள் மக்காச்சோள சாகுபடிப் பரப்பை அதிகரிக்கக் கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழு சார்பில் விதை, உரம், வழங்கி நல்ல விலை கிடைத்திட உத்தரவாதம் அளிக்கக் கூடிய வகையில் ஒப்பந்தம் செய்திட திட்டமிட்டுள்ளோம்.

இம்முறையில் மக்காச்சோள சாகுபடி செய்திடும் விவசாயிகள் பூச்சி மருந்து அடிக்கத் தேவையில்லை. இயற்கை உரம் போட்டு நல்ல விளைச்சலை பெறலாம். வெளி மாநிலங்களில் இருந்து ரயில் மூலம் கொண்டு வரும்போது மக்காச்சோளம் விரயம் ஆவதுடன், கூடுதல் செலவும் ஆகிறது. அதே சமயம் தமிழகத்திலேயே மக்காசோள சாகுபடி செய்யும்போது செலவு குறையும். அந்தத் தொகையை விவசாயிகளுக்கு வழங்கினால் அவர்கள் பயன் அடைவார்கள். தமிழகக் கோழிப் பண்ணையாளர்களின் மக்காச்சோளக் கொள்முதல் மூலம் தமிழக விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தமிழகத்தில் மக்காச்சோள சாகுபடியை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கவும் கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழுத் திட்டமிட்டுள்ளது என்றார்.

## ஈரோடு சந்தையில் குவிந்த கேரள அன்னாசிப் பழங்கள்

ஈரோடு நேதாஜி கனி சந்தையில் கேரள அன்னாசிப் பழங்களின் விற்பனை சூடுபிடித்துள்ளது.

ஆண்டு முழுவதும் கிடைக்கக் கூடிய பழங்களில் ஒன்று அன்னாசிப் பழம் ஆகும். இதுமட்டும் இன்றி அன்னாசிப் பழம் அளவு இல்லாத நற்குணங்களைக் கொண்டது. பல்வேறு பூக்களின் மகரந்தங்கள் இணைந்து உருவாகும் என்பதால் இப்பழத்துக்கு பலவித உடல்நலக் குறைவுகளைச் சரி செய்யும் தன்மை உள்ளது.

அன்னாசிப் பழத்தின் சிறப்பு ப்ரோமிலைன் என்ற காம்ப்ளெக்ஸ் பொருள் ஆகும். இதற்குப் பல வகை என்சைம்கள் இணைந்து செய்யக் கூடிய செயல்களின் ஆற்றல் உள்ளது. ப்ரோமிலைன் உடல் எடையைக் குறைக்கும் சக்தி கொண்டது. ஜீரண சக்தியை நன்கு தூண்டக்கூடியது என்பது உள்ளிட்ட உடலுக்குப் பல்வேறு நலன்களை இப்பழம் தருகிறது.

பல்வேறு பகுதிகளில் இருந்து அன்னாசிப் பழம் ஈரோடு சந்தைக்கு விற்பனைக்கு வந்தாலும், தற்போது கேரளத்தில் இருந்து அதிக அளவிலான அன்னாசிப் பழங்கள் ஈரோட்டு டன் கணக்கில் வரத் தொடங்கியுழள்ளன.

இங்கிருந்து மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். ஒரு பழம் ரூ.30 முதல் ரூ. 35 வரையிலும் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தேங்காய் பருப்பு ரூ.24 லட்சத்துக்கு ஏலம்

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய், தேங்காய் பருப்பு ரூ. 24 லட்சத்துக்கு ஏலம் போனது.

இந்த ஏலத்துக்கு 866 மூட்டைகளில் 39,366 கிலோ எடையுள்ள தேங்காய் பருப்பு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதில், முதல் தரம் அதிகபட்ச விலையாக கிலோ ரூ.54.20-க்கும், குறைந்த பட்சவிலையாக கிலோ ரூ.52.15-க்கும், இரண்டாம் தரம் அதிகபட்ச விலையாக ரூ.52.60-

க்கும், குறைந்தபட்ச விலை ரூ.45.10-க்கும் என மொத்தம் ரூ.19 லட்சத்து 98 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இதேபோல், 33 டன் எடையுள்ள 82 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்ச விலையாக டன் ரூ. 13,899-க்கும், குறைந்த விலையாக டன் ரூ. 11,800-க்கும், சராசரி விலை ரூ.12,300 என மொத்தம் ரூ.4 லட்சத்து 9ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

## குறுவை நாற்றங்கால் வயல்களில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு

வேளாண்மை அறிவியல் விஞ்ஞானிகள் மன்னார்குடி வட்டாரத்தில் குறுவை நாற்றங்கால் வயல்களில் ஆங்காங்கே சில இடங்களில் குலைநோய் தாக்குதல் அறிகுறிகள் தென்படுவதைக் கண்டறிந்துள்ளனர்.

மன்னார்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் உத்திராபதி, நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பூச்சியியல்துறை உதவி பேராசிரியர் இராஜா.ரமேஷ் மற்றும் மன்னார்குடி வட்டார வேளாண்மை அலுவலர் விஜயகுமார் ஆகியோர் மேலநாகை கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள குறுவை நெல் நாற்றங்கால் வயல்களை புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்பு குலைநோய் தாக்குதலிலிருந்து நெற்பயிரைக் காக்க கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என தெரிவித்தனர்.

நோய் பரவும் விதம்

காற்றின் மூலம் பரவக்கூடிய இந்த பூஞ்சாண நோயானது, குதிரைவாலி மற்றும் இஞ்சிப்புல் போன்ற களைகள் மூலமும் பரவும் தன்மை கொண்டது.

குலைநோய் தாக்குதலின் அறிகுறிகள்

இலையின் மேற்பரப்பில் முதலில் சிறிய பசுமை கலந்த நீல நிற புள்ளிகள் உருவாகும். இந்தப் புள்ளிகள் அளவில் பெரிதாகும்போது நீண்டும், பின்பு அதன் இரண்டு பக்க நுனிகளும் விரிவடைந்து, நடுப் பகுதியில்

அகலமாகவும், முனைகள் கூராகவும் உடைய நீண்ட கண் வடிவத்தைப் பெறுகின்றன.

இந்த கண் வடிவ புள்ளிகளின் ஓரங்கள் கரும்பழுப்பும், உட்பகுதியில் இளம் பச்சை அல்லது சாம்பல் நிறமும் கொண்டவையாக இருக்கும். தாக்குதல் அதிகமாகும்போது இலையில் காணப்படும் பல புள்ளிகள் ஒன்று சேர்வதால் இலைகள் காய்ந்து தீய்ந்தது போல் காணப்படும்.

இறுதியாக இலைகள் உதிர்ந்துவிடும். மேலும் நாற்றங்காலில் குலைநோய் தாக்குதலால் நாற்றுகள் கருகி மடிந்துவிடும்.

குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் பாக்டீரியாவை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

வயல்வெளியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காணப்படும் களைகளை அழித்து மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

நாற்றுகளை நடவு வயலில் நெருக்கமாக நடக்கூடாது.

நெற்பயிரில் குலைநோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த டிரைசைக்ளோசோல் அல்லது கார்டிபன்டிடசிம் மருந்தை 1 லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

நாற்றுகளை நடுவதற்கு முன்பு ஓர் ஏக்கருக்கான நாற்றின் வேர்களை 1 கிலோ சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் கரைசலில் நனைத்து நடும்போது, நடவு வயலில் ஆரம்ப காலங்களில் குலைநோய் உண்டாவதைத் தடுக்கலாம். இந்த முறைகளை விவசாயிகள் பின்பற்றிட வேண்டும்.

## ஜூன் 30-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூரில் ஜூன் 30-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஆட்சியர் அலுவலகத்தில் ஜூன் 30-ஆம் தேதி காலை 10.30 மணியளவில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் எம். மதிவாணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் தவறாமல் பங்கேற்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## திருவாரூர் மாவட்டத்தில் 1000 ஹெக்டேரில் தோட்டக்கலை பயிர் சாகுபடி: ஆட்சியர் தகவல்

திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன என ஆட்சியர் எம்.மதிவாணம் தெரிவித்தார்.

மன்னார்குடி பகுதியில் தோட்டக்கலை மூலம் உயர்தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலை பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சியர் எம்.மதிவாணன் புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலநாகை கிராமத்தில் விவசாயி ராஜேந்திரன் தோட்டத்தில் மூன்று ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசன முறையில் பயிர் செய்துள்ள பாகற்காய், புடலங்காய், கத்தரிக்காய் ஆகிய தோட்டக்கலை பயிர்களையும், கீழநாகை கிராமத்தில் விவசாயி முகமதுசுபையர் இரண்டு ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் கீழ் அடர் நடவு கொய்யா சாகுபடியையும், மாங்கனி சாகுபடியையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் விவசாயிகளிடம் சாகுபடி, வணிக ரீதியான விற்பனைகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்த பின் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தது:

திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இதில் 400 ஹெக்டேரில் பழ வகைகளும், 400 ஹெக்டேரில் காய்கறி, கீரை வகைகளும், 20 ஹெக்டேரில் மலர் வகைகளும், 20 ஹெக்டேரில் மிளகாய் வகைகளும், 160 ஹெக்டேரில் முள்ளில்லா மூங்கில். சவுக்கு என மர வகைகளும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மூலம் விவசாயிகள் பயன் அடைய மத்திய, மாநில அரசுகளில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மன்னார்குடி, நீடாமங்கலம், வலங்கைமான், குடவாசல் ஆகிய வட்டங்களில் இத்திட்டம் அதிக அளவில் செயல்பாட்டில் உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் சாகுபடி செய்யப்படுபவையை சந்தைப்படுத்தி நல்லமுறையில் விற்பனை செய்யவும் துறைவாரியான ஆலோசனை வழங்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனம், நுண்ணீர் பாசனம் மூலம் தண்ணீரை சிக்கனப்படுத்தி சேமிக்க முடியும் என்றார்.

ஆய்வின்போது வேளாண்மை இணை இயக்குநர் மயில்வாகனன், தோட்டக்கலை துணை இயக்குநர் சுரேஷ்குமார், மாவட்ட வளர்ச்சி மேலாளர்(நபார்டு) ரவிசங்கர், மன்னார்குடி வட்ட துணை தோட்டக்கலை அலுவலர் முகமதுசாதிக் ஆகியோர் உடனிருந்தனர்.

## மாவட்டத்தில் மழை நீடிப்பு: வானூரில் 33 மி.மீ. பதிவு

விழுப்புரம் மாவட்டத்தில் 3ஆவது நாளாக புதன்கிழமையும் மழை நீடித்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக வானூரில் 33 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. திங்கள்கிழமை மாலை பெய்த மழையின்போது மின்னல் பாய்ந்து கஞ்சனூரில் 2 பேர் உயிரிழந்தனர். செவ்வாய்க்கிழமை மாலை வளவனூர், உளுந்தூர்பேட்டை, வானூர், விழுப்புரம், திருக்கோவிலூர் பகுதியில் பரவலாக மழை பெய்ததுடன், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, மரக்காணம் பகுதிகளில் லேசான

மழை பெய்தது. விழுப்புரத்தில் மாலையில் தொடங்கிய மழை அதிகாலை வரை தொடர்ந்தது.

இந்த நிலையில், புதன்கிழமை மாலை 4 மணி முதல் இரவு வரை விழுப்புரம் சுற்றுவட்டார பகுதிகளில் மழை கொட்டித் தீர்த்தது. இதனால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதுடன் ஆங்காங்கே உள்ள தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது.

இதன் காரணமாக வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர். அதேபோன்று விடாமல் மழை பெய்ததால் பள்ளி மாணவர்களும், வேலை முடித்து பணியாளர்களும் மழையில் நனைந்தபடி வீட்டுக்குத் திரும்பினர். மழை நிலவரம்: மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை முதல் புதன்கிழமை காலை வரை சராசரியாக 13 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக வானூரில் 33 மி.மீ. மழை பெய்தது. உளுந்தூர்பேட்டையில் 29, விழுப்புரத்தில் 19, திருக்கோவிலூரில் 13, திண்டிவனத்தில் 9, சங்கராபுரம் மற்றும் செஞ்சியில் 6, மரக்காணத்தில் 4 மி.மீ.மழை பெய்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 600 வகை மரங்கள் விவசாயி பராமரிப்பு

சாலவாக்கம்;கைத்தண்டலம் கிராமத்தில், 600 வகையான மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ள வேளாண் பண்ணையை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி பார்வையிட்டு, 601வது மரமாக பன்னீர் பூ மரத்தை நட்டு, பாராட்டினார். உத்திரமேரூர் ஒன்றியம், சாலவாக்கம் அடுத்துள்ளது கைத்தண்டலம் கிராமம். இந்த கிராமத்தை சேர்ந்த விவசாயி மாசிலாமணி, 45, என்பவர் தனக்கு சொந்தமான, 10 ஏக்கர் பரப்பு நிலத்தில், 2009ம் ஆண்டு முதல், பல வகையான மூலிகை மரம் மற்றும் செடிகளை பயிரிட்டு பராமரித்து வருகிறார்.

இந்த வேளாண் பண்ணையில், சந்தனம், செஞ்சந்தனம், வேங்கை, வில்வம், மகாவில்வம், வன்னி, பதிமுகம், நாகலிங்கம், ரோசொட்டு, சிசுமரம், மகிழமரம் மற்றும் ஆப்பிள், உத்திராட்ச மரம், போதி மரம், திருவோடு உள்ளிட்ட பல்வேறு அரிய வகை மரங்கள் உள்ளன.

இதே போல கருந்துளசி, காட்டாமணக்கு, கடல் அத்தி, கருநொச்சி, பாக்கு, வாகநாரம், கருந்தொண்ணை, கல்யாண முருங்கை, வெள்ளருக்கு, திருவாட்சி, தோதகத்தி, புன்னை, இளமஞ்சு போன்ற மருத்துவ குணம் கொண்ட செடி வகைகளும், பாரிஜாதம், பவளமல்லி, மனோரஞ்சிதம் போன்ற மலர் வகைகளும், செர்ரி, புதுவை பலா ஆகிய பழ வகை மரங்கள், வெற்றிலை,

காப்பி உள்ளிட்ட செடிகளும் வளர்க்கப்படுகின்றன.

தற்போது, 600 வகையான மரக்கன்றுகள் உள்ள. இந்த வேளாண் பண்ணையை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி பார்வையிட்டு, 601வது மரமாக பன்னீர் பூ செடியை நட்டார். தொடர்ந்து, பண்ணையில் உள்ள மரங்கள் மற்றும் அதன் தன்மைகள் குறித்து, பண்ணை உரிமையாளர் மாசிலாமணி, மாவட்ட ஆட்சியரிடத்தில் விளக்கினார்.

அப்போது, அடுத்த சில ஆண்டுகளில் 1000 வகையான மரங்கள் வளர்க்க திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் மாசிலாமணி தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி கூறுகையில், "இப்பகுதியில் இம்மாதிரியான மரங்களை பார்க்கும் போது ஆச்சர்யமாகவும், ஆனந்தமாகவும் உள்ளது. இது போன்ற விவசாயிகளை முன்மாதிரியாக கொண்டு, மரங்கள் நட்டு பராமரிப்பதை அனைவரும் கடமையாக மேற்கொள்ள வேண்டும்," என்றார்.

## 37 லிட்டர் பால் கறந்து அசத்திய கடலூர் மாட்டுக்கு ரூ.1 லட்சம் பரிசு

ஈரோடு: ஈரோட்டில் நடந்த கால்நடை கண்காட்சி நிறைவு விழாவில், 37 லி., பால் கறந்த மாட்டுக்கு, ஒரு லட்ச ரூபாய் பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முற்போக்கு பால் பண்ணையாளர்கள் சங்கம் சார்பில், கால்நடை கண்காட்சி ஈரோடு வில்லரசம்பட்டியில் உள்ள சக்தி துரைசாமி திருமண மண்டபத்தில கடந்த இரு நாட்களாக நடந்தது. இதில் மொத்தம், 85 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. கண்காட்சி நிறைவு நாளில், பால் கறக்கும் போட்டி நடத்தப்பட்டது. கறவை மாடுகளுக்கான போட்டியில் கடலூரை சேர்ந்த, பிரதீப் தாமோதரனின் மாடு அதிகபட்சமாக, 37.1 லி., பால் கறந்து, முதல் பரிசை தட்டிச் சென்றது. இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தை திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த அருண்குமாருக்கு சொந்தமான இரண்டு மாடுகள் பெற்றன. இரண்டாம் இடம் பிடித்த மாடு, 31.5 லி., மூன்றாம் இடம் பிடித்த மாடு, 25.2 லி., பால் கறந்தன. இதேபோல், நாட்டு மாடுகளுக்கான போட்டியில கரூர் மாவட்டத்தை சேர்ந்த ராஜபாலசுப்பிரமணியத்தின் மாடு, 14.8 லி., பால் கறந்து, முதல் இடத்தையும், எருமை மாடுகளுக்கான போட்டியில், கரூர் மாவட்டத்தை சேர்ந்த கணேசனின் மாடு, 14 லி., பால் கறந்து முதல் இடத்தையும் பிடித்தன. கண்காட்சியின் நிறைவு விழா நேற்று முன்தினம் நடந்தது. விழாவுக்கு கண்காட்சியின் தலைவர் அரவிந்தன் தலைமை வகித்தார். சங்கத்தின் தலைவர் முருகன், பொதுசெயலாளர் விஜயகுமார் முன்னிலை வகித்தனர். விழாவில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு ஆஸ்திரேலியாவை சேர்ந்த டாக்டர் மேட் பரிசு வழங்கினார். இதல் கறவை மாடுகளுக்கான போட்டியில் முதல் பரிசாக ஒரு லட்சம், 2வது பரிசாக, 30 ஆயிரம், 3வது பரிசாக, 15 ஆயிரம் ரூபாய் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. இதேபோல், நாட்டு மாடுகள் மற்றும் எருமை மாடுகளுக்கான போட்டியில் பரிசுத் தொகை மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன. விழாவில், சங்க பொருளாளர்

அசோகன், இணை செயலாளர்கள் சுந்தர், ஞானசேகர், தொல்காப்பியர், செந்தில் ரெட்டி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உளுந்து பயிரை தாக்கும் மஞ்சள் சோகை நோய்

அவலூர்பேட்டை: உளுந்து பயிரை தாக்கும் மஞ்சள் சோகை நச்சுயிரியை கட்டுப்படுத்தும் முறைகளை வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேல்மலையனுார் வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மேல்மலையனுார் தாலுகாவில் கோடை பருவத்தில் உளுந்து சாகுபடி செய்துள்ளனர். இப்பயிரில் சில இடங்களில் மஞ்சள் தேமல் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது.

இளம் இலைகளில் மஞ்சள் நிற புள்ளிகள் தோன்றி, முடிவில் இலை மஞ்சளாக மாறும். பயிர்கள் குட்டையாகவும், காலம் தாழ்த்தி முதிர்ச்சி, குறைந்தளவு பூக்கள் மற்றும் காய்கள் உற்பத்தி உள்ளிட்டவை இந்நோய் தாக்குதலின் அறிகுறிகளாகும்.

நோய் எதிர்ப்பு சக்திக்கு வம்பன்-4, 5 பயிரிடலாம், வரப்பு பயிராக ஏழு வரிசையில் சோளத்தை பயிரிடல் வேண்டும். இமிடாகுளோபிரிட் 70 குறிப்பிட்ட அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். உளுந்து மஞ்சள் சோகை நச்சுயிரி தாக்கிய பயிர்களை முளையிலேயே களைந்து கட்டுப்படுத்தலாம்.

புரோபினோபாஸ் 750 மி.லி., அல்லது டை மெத்தோயேட் 750 மி.லி., ஒரு எக்டர் என்ற அளவில் விதைத்து 25 மற்றும் 40 நாள் தழை தெளிப்பு செய்து கட்டுப்படுத்தலாம்.

வெர்டிசிலியம் லெகாணி உயிரியல் பூச்சி மருந்தினை எக்டர் ஒன்றுக்கு 3 கிலோ அளவில் நீரில் கலந்து மாலை நேரத்தில் தெளிக்கலாம். இதை விதைப்பு செய்த 20 மற்றும் 35 நாள் தழை தெளிப்பு செய்ய வேண்டும். வெள்ளை ஈயை கட்டுப்படுத்தவதன் மூலம் மஞ்சள் நோயை கட்டுப்படுத்த முடியும்.

## பிறந்த கன்றுக்கு பால் சுரக்கும் அதிசயம்

காடையாம்பட்டி: கே.மோரூரில், பிறந்து சில நாட்களேயான கன்றுக்குட்டி மடியில் பால் சுரக்கும் அதிசயத்தை, மக்கள் பார்த்து செல்கின்றனர்.

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி தாலுகா, கே.மோரூர் காட்டுவளவில் வசிப்பவர் வேலு, 35. அவரது மனைவி விஜயலட்சுமி. விவசாயத்தொழில் செய்யும் அவர்கள், சிந்து வகையைச் சேர்ந்த மூன்று பசு மாடுகளை வளர்க்கின்றனர். அதில், ஒரு பசுமாடு நான்காவது முறையாக, சில நாட்களுக்கு முன், ஒரு கன்றை ஈன்றது. பிறந்த கன்றுக்கு பால் மடி சற்று பெரிதாக காணப்பட்டது. மறுநாள், கன்று மடியில் நான்கு காம்புகளில் பால் சொட்டு, சொட்டாக வெளியேறியது. அதைக்கண்ட வேலு, சந்தேகத்துடன் மடியில் பால் கறக்க துவங்கியதும் பால் வர துவங்கியது. பிறந்த கன்று குட்டி மடியில் பால் சுரப்பதை அறிந்த சுற்று வட்டார பகுதிவாசிகள், கன்று குட்டியை ஆர்வமுடன் பார்த்து செல்கின்றனர். இரண்டரை ஆண்டுக்கு பின் தான் பசுவின் மடியில் பால் கறக்க முடியும். காலை, மாலை அரை லிட்டர் பல் சுரக்கும் கன்று, தன் தாயின் மடியில் பால் குடித்துக்கொண்டே, தன் மடியில் பால் வழங்குவதை காண, அதிசயமாக இருந்தது.

இதுகுறித்து, வேலு கூறுகையில், "பல ஆண்டுகளாக மாடுகள் வளர்க்கிறோம். பிறந்த கன்று, பால் சுரப்பது இதுதான் முதல்முறை என்பதால், அதிசயமாக உள்ளது," என்றார்.

டேனிஷ்பேட்டை கால்நடை மருத்துவர் பைஹுசி கூறுகையில், "இது அரிதான நிகழ்வு. தாய் பசுவின் ஹார்மோன் பிரச்னையால் (புரலாக்டிங்) கன்று மடியில் பால் சுரக்கும் செயல் நடைபெறும். நாளடைவில், தானாக பால் சுரக்காமல் நின்றுவிடும். அதற்கு மருத்துவ சிகிச்சை தேவையில்லை," என்றார்.

**தமிழகம்,கேரளாவில் முட்டை விலை 429 காசாக நிர்ணயம்**

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 429 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட்டிங் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 424 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, ஐந்து காசு உயர்த்தி, 429 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது, தமிழகம், கேரளாவில் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது. முட்டை விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 452, ஐதராபாத், 408, விஜயவாடா, 402, பர்வாலா, 402, மும்பை, 455, மைசூர், 446 பெங்களூரு, 443, கோல்கட்டா, 443, டில்லி, 407 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 86 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டைக்கோழி விலையை, எவ்வித மாற்றமும் செய்யாமல் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பல்லடத்தில் நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையை, எவ்வித மாற்றமும் செய்யாமல், அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

## விளைச்சலை பெருக்க உம் முறை மண் மாதிரி சேகரிப்பு

காரைக்குடி,:மண் வளத்தை சரியாக பாதுகாக்காததால் மகசூல் குறைந்து வருகிறது. மண்ணில் களர்தன்மை அதிகரித்தால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறையும். உவர் தன்மை அதிகரித்தாலும் பயிருக்கு தேவையான சத்துக்கள் கிடைக்காமல் போகும். விவசாயிகள் மண் பரிசோதனை செய்யாமல், வழி, வழியாக வந்த பயிர்களையும், தங்களுக்கு தெரிந்த உரங்களையும் இடுவதன் மூலம் மண்ணில் உள்ள சத்துக்கள் குறைந்து விளைச்சல் பாதிக்கப்படுவதுடன், பயிர்கள் நோய் தாக்குதலுக்கும் உள்ளாகிறது. இதை களையும் வகையில், மண்ணுக்கேற்ற ரகங்களை பயிரிட விவசாயிகளுக்கு வலியுறுத்துவதற்காக வட்டார வேளாண் துறை சார்பில் கடந்த ஆண்டு 10 எக்டேருக்கு ஒரு இடத்தில் மண் மாதிரி சேகரித்து ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

அதனுடைய முடிவு குறித்த விபரங்கள் விவசாயிகளுக்கு அட்டையாக வழங்கப்பட்டு வருகிறது. அதன் மூலம் அவர்கள் தேவையான உரங்களை இட முடியும். இந்நிலையில், இரண்டாம் கட்டமாக, விடுபட்டு போன பகுதிகளில் மண் மாதிரி சேகரிக்கும் பணியில் சாக்கோட்டை, கல்லல் வேளாண்துறை அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வேளாண்துறை அலுவலர் ஒருவர் கூறும்போது: மண் பரிசோதனை செய்வதன் மூலம், அதற்கு தேவையான உரங்களை மட்டும் இட்டு அதிக மகசூல் பெற்றிடலாம். மண்ணின் உவர் தன்மையை அறிந்து வடிகால் வசதியை பெருக்கி உப்பை தாங்கி வளரும் சூர்ய காந்தி, பருத்தி, மிளகாய் பயிர்களை சாகுபடி செய்யலாம். மண்ணின் தன்மைக்கேற்ப பயிரை தேர்ந்தெடுக்கவும் மண்பரிசோதனை அவசியம். ஏற்கனவே சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகள் அந்தந்த பகுதி விவசாயிகளுக்கு அட்டையாக வழங்கப்பட்டுள்ளது. இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஐ.டி., பாஸ்வேர்டு மூலம் ஆன்லைனில் பார்த்து கொள்ளலாம், என்றார்.

## தொடர் மழையால் விவசாய பணிகளில் ஆர்வம்

தர்மபுரி: தொடர் மழையால், விவசாயிகள் புதிதாக பயிர்களை நடவு செய்ய, தங்களது விவசாய நிலங்களை உழுது தயார் செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில், கோடை மழை எதிர்பார்த்த படி கை கொடுக்காததால், மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பகுதிகளில் உள்ள மானாவரி நிலங்களில் பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இறவை பாசன விவசாயிகளும் குறிப்பிடதக்க வகையில் மட்டும் பயிர்களை பாசனம் செய்தனர். இந்நிலையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், சாகுபடி செய்ய விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களை உழுது தயார்படுத்தி வருகின்றனர். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை, 9 மணி வரை, பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக அரூர், 27.20, பாப்பிரெட்டிப்பட்டி, 21.40, கலெக்டர் அலுவலகம், 17, தர்மபுரி, 9, ஒகேனக்கல், 2.80, பென்னாகரம், 1 மில்லிமீட்டர் மழையளவு பதிவானது. நேற்று காலை, 9 மணிக்கு மேல் மழை நின்றதை அடுத்து, விவசாயிகள், விவசாய பணியாளர்கள் மூலம் தங்களது நிலங்களில் உழவு தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தானியங்கள் சேமிப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

அரூர்: தர்மபுரி மாவட்டம், அரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், விவசாயிகளுக்கு விஞ்ஞான முறையில் தானியங்கள் சேமிப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. இதில் கோவை வேளாண்மை உதவி இயக்குனர் சாத்தப்பன் பங்கேற்று பேசுகையில், விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் தானியங்களை எங்கெல்லாம் சந்தைப்படுத்தலாம் என்பது குறித்து கூறினார். மேலும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை, உழவர் சந்தையில் விற்பனை செய்ய என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும், உழவர் பாதுகாப்பு திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கினார். விவசாய விளைப்பொருட்களை

சேமிப்பது மற்றும் பதப்படுத்துதல் முறைகளையும், அறுவடை செய்த பின்பு மேற்கொள்ள வேண்டிய செய் நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சியையும் வழங்கினார். பயிற்சி முகாமில், தர்மபுரி மாவட்ட, வேளாண்மை வணிக இயக்குனர் சந்திரசேகரன் பங்கேற்று சந்தை சார்ந்த சாகுபடி திட்டம், குளிர்பதன கிடங்கு திட்டம் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். வேளாண் வணிக அலுவலர் சுப்பிரமணி உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சந்தைப்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

தர்மபுரி : தர்மபுரியில் விளைப்பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்த விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

தர்மபுரி மாவட்ட விவசாயிகளுக்கு தங்களுடைய வேளாண்மை விளைப்பொருட்களை எவ்வாறு சந்தைப்படுத்துதல் என்பது குறித்த பயிற்சி, தர்மபுரி விற்பனைகுழு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடந்தது. முகாமில், தாங்கள் உற்பத்தி செய்யும் தானியங்களை எவ்வாறு சேமிப்பது, தரம்பிரித்தல், அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பங்கள், சந்தை தகவல்கள், விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இருப்பு வைத்து பொருளீட்டுக்கடன் பெறும் வழிமுறைகள், உழவர் பாதுகாப்புத்திட்டம், குளிர்பதன கிடங்கில் இருப்பு வைத்தல், அக்மார்க்நெட், சந்தைசார்ந்த சாகுபடி திட்டம் ஆகியவற்றைப்பற்றிய தொழில்நுட்ப விபரங்கள் பற்றிய விவசாயிகளுக்கு, வேளாண் உதவி இயக்குனர் சாத்தப்பன் கூறினார்.

பயிற்சி முகாமில், மாநில அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகம் வேளாண்மை அலுவலர் தாம்சன், கலப்பட உணவுபொருட்களை உண்பதால் நுகர்வோருக்கு ஏற்படும் தீமைகள். கலப்பட பொருட்களை கண்டறிந்து

வாங்கக்கூடாது. அக்மார்க் உள்ள பொருட்களை வாங்கி பயன்படுத்த வேண்டும். முதலீட்டாளர்கள் வேளாண்மை விளைபொருட்களுக்கு அக்மார்க் சான்று வாங்கி சந்தைப்படுத்த முன்வரவேண்டும் என்றார். முகாமில், வேளாண் உதவி அலுவலர்கள், விற்பனை வாரிய பணியாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண் அலுவலர் செல்வம் நன்றி கூறினார்.

## உவர் நிலங்களில் சணப்பு பயிரிட்டால் மண் வளம் மேம்படும் வேளாண் அதிகாரி விளக்கம்

பட்டுக்கோட்டை : மண்வளம் மேம்பட பசுந்தாளுர பயிரான சணப்பு பயிர் சாகுபடி செய்து பூக்கும் தருணத்தில் மடக்கி உழ வேண்டும் என வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார். இது குறித்து திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது. இடைவெளிவிடாது தொடர்ந்து நிலத்தில் பயிர்கள் சாகுபடி செய்து வருவதால் மண்ணின் மேற்பரப்பில் உள்ள சத்துக்கள் குறைந்து வளமற்ற தன்மையினை அடைவதுடன் மண்ணின் பவுதிக மற்றும் ரசாயன அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு காலப்போக்கில் சாகுபடிக்கு பயனற்ற நிலமாக மாறுகிறது.

எனவே, மண்ணின் வளம் குன்றாமல் இருக்க தொடர்ந்து ஒரே வகை பயிரை சாகுபடி செய்வதை அறவே தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ற மாற்று பயிரினை சாகுபடி செய்து பயிர் சுழற்சி முறையை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். தற்சமயம், திருவோணம் வட்டாரத்தில் குறுவை சாகுபடி செய்யப்படும் இடங்கள் போக மீதியுள்ள ஒருபோக சம்பா சாகுபடி செய்யப்படும் இடங்கள் பெரும்பாலும் தரிசாகவே உள்ளது. அதுபோன்ற இடங்களிலும், பயிர் வளர்ச்சி குன்றி மகசூல் குறைவு உண்டாகக் கூடிய களர் -உவர் நிலங்களிலும், தென்னை சாகுபடி செய்துள்ள தோப்புகளிலும் பசுந்தாளுரப் பயிரான சணப்பு பயிரிடுவதற்கு இக்கோடைப்பருவமே ஏற்ற தருணமாகும்.

தற்சமயம் கோடை மழை பரவலாக பெய்து வருகிறது. இம்மழையின்

ஈரத்தை பயன்படுத்தி சணப்பு பயிர் பயிரிட்டு சரியாக 45 நாள் கழித்து பூக்கும் தருணத்தில் டிராக்டர் கொண்டு மடக்கி உழுது பசுந்தழை பயிரினை நன்கு உழுது மக்கச் செய்ய வேண்டும். இதனால் சீர்கெட்டு கிடக்கும் எவ்வகையான நிலமும் இயற்கை வளம் நிறைந்த நிலமாக மாறும். மண்ணில் காற்றோட்டம் சீராக இருக்கும். அங்கக உயிரினங்களின் பெருக்கம் அதிகரிக்கச் செய்யும். மண்ணின் பௌதீக மற்றும் இரசாயன மாற்றங்கள் நிலை நிறுத்தப்படும்.

மண்ணில் நீர்பிடிப்புத் தன்மை அதிகரிக்கச் செய்யப் பெற்று நீண்ட நாட்கள் ஈரத்தன்மை காக்கப்படும். இதற்கு 20 கிலோ சணப்பு விதையினை ஒரு ஏக்கரில் விதைப்பு செய்யவேண்டும். இதற்கு 50 சத மானியமும் அளிக்கப்படுகிறது. 20 கிலோ விதையின் மொத்த மதிப்பு ரூ ஆயிரத்து 100 ஆகும். இதில் 50 சத மானியத்தொகை ரூ 550 போக மீதி தொகையை மட்டும் விவசாயிகள் செலுத்தினால் போதும். தேவையான சணப்பு விதைகள் திருவோணம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## இயந்திர நடவுக்கு ரூ.4000 பின்னேற்பு மானியம் ஒதுக்கீடு

பேராவூரணி : பேராவூரணி வேளாண்மை கோட்டத்திற்கு குறுவை தொகுப்பு திட்டத்தில் 15.27 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குநர் ஈஸ்வர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது. குறுவை சாகுபடி திட்டத்தில் பேராவூரணி வட்டார விவசாயிகள் பயன்பெறும் வகையில் 15.27 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் இயந்திரம் மூலம் நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் பின்னேற்பு மான்யமாக அவர்களது வங்கி கணக்கில் வரவு வைத்திட 310 ஏக்கர் இலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு 100 ஏக்கருக்கு நெல் நுண்ணூட்டம், 250 ஏக்கருக்கு

சிங்சல்பேட் நுண்ணூட்ட உரமும் இலவசமாக பேராவூரணி வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் வழங்கப்படும்.

குறுவை சாகுபடி மேற்கொள்ள இயலாத விவசாயிகளுக்கு சுமார் 50 ஏக்கருக்கு உளுந்து விதை 8 கிலோ ரூ.900 மானியத்தில் வழங்கப்படும். கோடை உழவு செய்து விதைக்கப்படும் உளுந்து செடியை மடக்கி உழுது மண்ணின் தரம் உயர்த்த ஏக்கருக்கு பின்னேற்பு மான்யம் ரூ.500 வழங்கப்படும். இது தொடர்பான குறுவை தொகுப்பு திட்ட விழிப்புணர்வு முகாம்கள் ஒட்டங்காடு, மதன்பட்டவூர், களத்தூர் கிராமங்களில் நடைபெற்றது. மற்ற கிராமங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடைபெறும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## குறுவை தொகுப்பு திட்டத்தில் நுண்சத்து, சிங்சல்பேட் இலவசமாக விநியோகம்

வலங்கைமான் : குறுவை தொகுப்பு திட்டத்தில் நுண்சத்து, சிங்சல்பேட் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருவதாக வலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தற்போது குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் நடவு பணிகளை இயந்திரம் மூலம் மேற்கொண்டால் ஒரு ஏக்கருக்கு 4 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.

கோடை நெல் அறுவடையை முடித்து குறுவை சாகுபடிக்கு தயாராகி வரும் விவசாயிகள் தங்கள் வயல்களில் மேட்டுப்பாத்தி அமைத்து இயந்திரம் மூலம் நடவு செய்து அரசு அறிவித்துள்ள மானியத்தை பெறலாம். மேலும் வெண்ணாறு கோட்ட பகுதியை சேர்ந்த வயல்களில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் மண் வளம் மேம்படுத்தப்படுவதன் காரணமாக அடுத்து வரும் சம்பா பருவத்தில் நெற்பயிர்கள் செழித்து வளர்வதற்கும், கூடுதல் மகசூல் பெறுவதற்கும் மண்வள மேம்பாட்டு பணிகள் உதவும்.

இந்த திட்டத்தில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்வதற்கான விதைகள் விவசாயிகளுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும்

குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் விலையில்லா நெல் நுண்சத்து, சிங்சல்பேட் ஆகிய இடுப்பொருட்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என வட்டார வேளாண் உதவி இயக்குநர் தேவேந்திரன் தெரிவித்துள்ளார்.

**வரத்துக் குறைவால் முருங்கை விலை மும்மடங்கு உயர்வு**

மதுரை, : வரத்துக் குறைவால் மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் முருங்கைக்காய் விலை மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், திருச்செந்தூர், ஆண்டிப்பட்டி மற்றும் மதுரை மாவட்டத்தின் சில பகுதிகளில் இருந்தும் 200 கிலோ வரை முருங்கைக்காய் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு வருகிறது. இப்பகுதிகளில், சாகுபடி குறைந்துள்ளதால் மார்க்கெட்டுக்கு வரத்தும் குறைந்துள்ளது. இதனால் விலை உயர்ந்துள்ளது. கடந்த இரு வாரங்களுக்கு முன் ரூ.15 முதல் ரூ.20க்கு விற்பனையான முருங்கை தற்போது ரூ.70க்கு விற்பனையாகிறது.

சென்ட்ரல் மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன் கூறுகையில், ''பங்குனி முதல் வாரத்தில் இருந்து வைகாசி இறுதி வரை முருங்கை சீசன். அதன் பிறகு வரத்துக் குறையத்தொடங்கும். தற்போது மழை விட்டுவிட்டுப் பெய்து வருவதால் சாகுபடி கொஞ்சம் குறைந்துள்ளது. இதனால், மார்க்கெட்டுக்கு வரத்துக் குறைந்து விலை உயர்ந்துள்ளது. ஆனால், கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் கிலோ ரூ.5 முதல் 10க்குள் மட்டுமே விலைபோனது'' என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### காஞ்சிபுரத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 1,300 டன் நெல் ஈரோட்டுக்கு வந்தது



ஈரோடு,
பொது வினியோகத்துக்காக சரக்கு ரெயில் மூலம் காஞ்சிபுரத்தில் இருந்து 1,300 டன் நெல் ஈரோட்டுக்கு வந்தது.

<u>நுகர்பொருள் வாணிப கழகம்</u>

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளிடம் இருந்து அதிக அளவில் நெல் கொள்முதல் செய்யப்படும்.

அப்படி கொள்முதல் செய்யும் போது, அந்த நெல் மூட்டைகள் தேவைப்படும் மாவட்டங்களுக்கு ரெயில் மற்றும் சரக்கு வாகனங்கள் மூலம் கொண்டு செல்லப்படும். பின்னர் அந்த நெல் அரவை மில்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அரிசியாக்கப்படும். இதனைத்தொடர்ந்து ரேஷன் கடைகளுக்கு அரிசி எடுத்து செல்லப்பட்டு பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது.

<u>1,300 டன் நெல்</u>

இந்தநிலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 1,300 டன் நெல் ஈரோடு ரெயில் நிலையத்துக்கு நேற்று கொண்டு வரப்பட்டது. இந்த நெல் மூட்டைகளை தொழிலாளர்கள் ரெயிலில் இருந்து இறக்கி, அதை லாரிகளில் ஏற்றினார்கள்.

அந்த லாரிகள் நெல் மூட்டைகளுடன் சிவகிரியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக குடோன்களுக்கு சென்றன. பின்னர் அந்த நெல் மூட்டைகள் அங்குள்ள நெல் அரவை மில்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கு நெல், அரிசியாக்கப்பட்டு ஈரோடு ரங்கம்பாளையம், வில்லரசம்பட்டி, கோபி, சத்தியமங்கலம், பவானி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு சொந்தமான குடோன்களில் இருப்பு வைக்கப்படும். அங்கிருந்து ஈரோடு மாவட்டத்தில் உள்ள ரேஷன் கடைகளுக்கு அரிசி எடுத்துச்செல்லப்பட்டு பொதுமக்களுக்கு வினியோகம் செய்யப்படும்.

# அடர் நடவு தொழில் நுட்பத்தில் அதிக லாபம் பெறலாம் கலெக்டர் பழனிசாமி தகவல்



அடர் நடவு தொழில் நுட்பத்தில் அதிக லாபம் பெறலாம் என்று நாகை மாவட்ட கலெக்டர் பழனிசாமி தெரிவித்தார்.

கலெக்டர் ஆய்வு

தமிழக முதல்-அமைச்சரின் குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் நாகை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் மூலம் துரிதப்படுத்தப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி மயிலாடுதுறை வேளாண்மை கோட்டத்தில் நடப்பு 2016-17-ம் ஆண்டு குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் மயிலாடுதுறையில் உள்ள அனைத்து கிராமங்களிலும் 3 ஆயிரம் ஏக்கரில் எந்திரம் மூலம் நடவுப்பணி நடைபெறுகிறது. இந்த நிலையில் தோட்டக்கலைத்துறை மூலம் 'மா' அடர் நடவு திட்டத்தின் கீழ் மயிலாடுதுறை அருகே குளிச்சாறு கிராமத்தில் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் மா மரம் அடர் நடவு முறையில் பயிரிடப்பட்டுள்ளது. இந்த பணியை நாகை மாவட்ட

கலெக்டர் பழனிசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அதிக லாபம்

அடர் நடவு முறையில் ஹெக்டேருக்கு 100 மரக்கன்றுகளுக்கு பதிலாக 400 மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இந்த தொழில் நுட்பத்தில் இளம் மரக்கன்றுகள் பராமரிப்பு மற்றும் கவாத்து மூலம் கிளைகளின் வளர்ச்சி, வேரின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டு 40 சதவீதம் முதல் அதிக லாபம் பெற வழி வகுக்கிறது. மேலும், நோய், பூச்சி தாக்குதல்களை எளிதாக கட்டுப்படுத்த முடியும். நன்செய் நிலத்தில் மா அடர் நடவு மூலம் அதிக லாபம் பெறலாம். எனவே, மேற்கண்ட நடவு திட்டத்தை பயன்படுத்தி விவசாயிகள் அதிக லாபம் பெற்று பயனடைய தங்கள் பகுதியில் உள்ள வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர்களை சந்தித்து பெயரை பதிவு செய்து கொள்ளலாம் என்றார். மேலும், மயிலாடுதுறை கோட்டத்தில் நெல் நுண்ணூட்டம் 6 ஆயிரத்து 600 ஏக்கர் அளவிலும், துத்தநாகசத்து 8 ஆயிரத்து 500 ஏக்கர் அளவிலும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், 50 நீர் கொண்டு செல்லும் குழாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்று வேளாண்மை துறையினர் தெரிவித்தனர்.

ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குனர் சேகர், உதவி கலெக்டர் சுபாநந்தினி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் சண்முகம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் விஜயகுமார், மேலாண்மை பொறியியல் துறை துணை செயற்பொறியாளர் மணிவண்ணன், உதவி செயற்பொறியாளர் சுகுமார் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

**பசுமையாக காட்சியளிக்கும் தேயிலை தோட்டங்கள் மகசூல் அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி**



ஊட்டியில் பெய்து வரும் மழையால் தேயிலை செடிகள் பசுமையாக காட்சியளிக்கின்றன. மேலும் பச்சை தேயிலை மகசூல் அதிகரித்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

வறட்சி

ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் நிலவிய கடும் உறைபனி மற்றும் பிப்ரவரி மாதத்தில் இருந்து சுட்டெரித்த வெயில் காரணமாக கடும் வறட்சி நிலவியது. மேலும் அணைகள், குளங்கள், குட்டைகள் உள்ளிட்ட நீரோடைகள் வறண்டு வந்தன.

இதனால் இந்த ஆண்டும் கடும் வறட்சி நிலவும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த மே மாதம் இறுதியில்

இருந்து ஊட்டியில் விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. இந்த மழையால் மீண்டும் பசுமை திரும்பி உள்ளது.

பச்சை தேயிலை

ஊட்டியில் நிலவிய வறட்சியால் தேயிலை செடிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. மேலும் மகசூலும் குறைந்து காணப்பட்டது. இதனால் விவசாயிகள், தேயிலை தொழிலாளர்கள் வருவாய் இழந்து வந்தனர். இந்த நிலையில் தற்போது ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பெய்து வரும் மழையால் தேயிலை தோட்டங்கள் பசுமையாக காட்சி அளிக்கின்றன.

இதன் காரணமாக பச்சை தேயிலை மகசூல் அதிகரித்து உள்ளது. இதனால் தேயிலையை பறிக்கும் பணியில் விவசாயிகள், தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தற்போது நல்ல தரமான பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.16 முதல் ரூ.18 வரை விலை கிடைக்கிறது. சுமாரான பச்சை தேயிலைக்கு ரூ.14 வரை விலை கிடைக்கிறது. மகசூல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வஞ்சி கொழுந்துகளாக மாறும் வாய்ப்பு

இதுகுறித்து ஊட்டி அருகே உள்ள சோலூரரை சேர்ந்த விவசாயி அசோக் கூறியதாவது:-

ஊட்டியில் தற்போது பெய்து வரும் பருவமழை போதாது. எதிர்பார்த்ததை விட குறைந்த அளவே மழை பெய்து வருகிறது. இதனால் தேயிலை செடிகளுக்கு உரமிடும் பணி பாதிக்கப்பட்டு உள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் முதல் நிலவிய கடும் வறட்சி காலநிலையால் பச்சை தேயிலை மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டது.

தற்போது பெய்யும் மழையால் பச்சை தேயிலை மகசூல் ஓரளவு அதிகரித்து உள்ளது. அதே நேரத்தில் ஊட்டி, மஞ்சூர் உள்ளிட்ட இடங்களில் பலத்த காற்று வீசுகிறது. இந்த காற்று காரணமாக தேயிலை

கொழுந்துகள் வஞ்சிகளாக மாற வாய்ப்பு உள்ளது. இவ்வாறு வஞ்சி கொழுந்துகள் வந்து விட்டால் பச்சை தேயிலை உற்பத்தி கடுமையாக பாதிக்கும்.

மகசூல் அதிகரிக்கும்

தற்போது பச்சை தேயிலைக்கு ஓரளவு விலை கிடைத்து வருகிறது. நல்ல தரமான பச்சை தேயிலைக்கு சில இடங்களில் கிலோ ஒன்றுக்கு ரூ.20 வரை விலை கிடைக்கிறது. ஆனால் பெரும்பாலான தொழிற்சாலைகளில் ரூ.16 வழங்கப்படுகிறது. இனிவரும் காலங்களில் தொடர்ந்து நல்ல மழை பெய்தால் மட்டுமே பச்சை தேயிலை மகசூல் அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## கோடைமழை எதிரொலி: கூடலூர் பகுதியில் நிலக்கடலை சாகுபடி தீவிரம்



கோடைமழை பெய்ததை அடுத்து கூடலூர் பகுதியில் மானாவாரி நிலங்களில் நிலக்கடலை சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது.

நிலக்கடலை சாகுபடி

தேனி மாவட்டம் கூடலூரில் மேற்குதொடர்ச்சி மலையடிவாரத்தை ஒட்டிய கழுதைமேடு, பெருமாள்கோவில்புலம், ஏகலூத்து, பளியன்குடி, புதுரோடு ஆகிய பகுதிகளில் மானாவாரி நிலங்கள் ஏராளமாக உள்ளன. இந்த பகுதிகளில் கோடை மழை பெய்ததை அடுத்து விவசாயிகள் நிலக்கடலை சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். வைகாசி மாதத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை செடிகள் ஆவணி முதல் வாரத்தில் விளைச்சல் அடைந்துவிடும். கடந்த சில வாரங்களாக நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில் தற்போது பருவமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக நிலக்கடலை செடிகள் நன்கு வளர்ந்து உள்ளன. கடந்த ஆண்டு இந்த பகுதியில் நிலக்கடலை சாகுபடி செலவு அதிகமாகி, போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் சிரமப்பட்டனர். இருப்பினும் இந்த ஆண்டு கூடலூர் பகுதியில் நிலக்கடலை சாகுபடி பரப்பை அதிகரித்து பயிரிட்டுள்ளனர். மேலும் இந்த ஆண்டு பருவமழை பெய்து செடிகள் வளர்ச்சி சீராக இருப்பதால் மகசூல் அதிகம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.